# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 24 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | : | 3 | நாள் | : | 12.12.2024 |
| பெயர் | : | தாமரைக்கண்ணன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of December 2024.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கேளையாபிள்ளையூரில் ரயில்வே ஸ்டேஷன் அருகில் டீக்கடை நடத்தி வருகிறேன். என் கடைக்கு எதிரே நரசிம்மன் என்பவர் கடை வைத்து உள்ளார். வழக்கமாக நான் காலை 5.30 மணிக்கு கடையை திறந்து இரவு 8.00 மணிக்கு அடைத்து விடுவேன். நரசிம்மன் டீக்கடையும், கூல்ட்ரிங்ஸ் கடையும் நடத்தி வந்தார். அவர் தனியாகதான் இருந்து வந்தார், அவருக்கு குழந்தையும், மனைவியும் இல்லை. 26.08.2018 அன்று காலையில் ஒரு பெண் நரசிம்மன் கடை திறக்கவில்லை என்றும், சத்தம் போட்டும் பதில் இல்லை என்றும் கூறினார், என் கடையில் டீ வாங்கி கொண்டு சென்றார், அதன் பின்னர் சுமார் 2 மணி நேரம் கழித்து நரசிம்மனின் தம்பி வந்து, கடையை பார்த்துவிட்டு, அந்த கடையின் மாடிப்பகுதிக்கு சென்றுவிட்டு, அழுது கொண்டே வந்தார். நான் அவர்

அழுது கொண்டு வந்ததால் என்ன நடந்தது என்பதை அறிய மாடிக்கு சென்று பார்த்தபோது அங்கு நரசிம்மன் இரண்டு கைளையும், கால்களையும் கட்டிப்போடப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார், அவர் தலையில் ஒரு காயம் இருந்தது. நான் கீழே வந்துவிட்டேன், அப்போது காலை சுமார் 8.30-9.45 மணி இருக்கும். ரகுநாத் காவல் நிலையத்தில் தகவல் சொல்லி போலீஸார் வந்தார்கள். அவர் முதன்நாள் இரவு கடையை அடைத்து விபரம் தெரியும், இரவு 10.00 மணிக்கு அடைத்தார். இரவு 11.00 மணிக்கு அவரது கடைக்கு அருகில் மூன்று நபர்கள் பல்சர் வாகனத்தில் வந்து நரசிம்மனுடன் பேசிக்கொண்டு இருந்தார்கள், அப்போது நாங்கள் பேச்சு சத்தம் கேட்டதால் நாங்கள் வெளியே சென்று பார்த்தால், அவ்வாறு மூன்று நபர்களுடன் பேசிக் கொண்டிருந்தது தெரியவந்தது. அந்த நபர்களும், நரசிம்மனும் மாடிக்கு சென்றார்கள், நான் கடைக்கு பொருட்கள் வாங்க வந்த வாடிக்கையாளர் என்று நினைத்து பேசாமல் இருந்து விட்டேன், நான் பார்த்த நபர்கள் சுமார் 22 வயதுடைய நபர்களாக இருந்தார்கள். நான் இருட்டாக இருந்ததால் நான் சரியாக அடையாளம் பார்க்கவில்லை. அந்த வண்டியின் பதிவு எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக என்னை போலீஸார் விசாரணை செய்தார். அவரை சம்பவ தினத்தன்று வந்து மூன்று நபர்கள் தான் இறப்பிற்கு காரணம் என்று கடைக்கு வந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். அதன் மூலம் நான் தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் மூன்று மாதம் கழித்து என்னை போலீஸார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** ஒத்தி வைக்கப்படுகிறது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2024.12.12 17:05:39 +0530